## Karnataka woos aerospace firms for MRO in Bengaluru

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Pub Date: | 02 Dec 2015 | Publication: | Dinamani | Edition: | Bangalore |
| Journalist: | Bureau | Language: | Tamil | Page No.: | 3 |
| CCM: | 48.26 | MAV: | 86865.47 | Circulation | 42000 |



# 'கர்நாடகத்தில் விமானச் சேவையை ஊக்குவிக்க நடவடிக்கை'




பெங்களூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விண்வெளிப் பாதுகாப்பு கண்காட்சியைத் தொடக்கிவைத்து, மலரை வெளியிடும் அமைச்சர் ரோஷன் பெய்க்.

பெங்களூரு, டிச.1: கர்நாடகத்தில் விமானச் சேவையை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று, அந்த மாநில உள்கட்டமைப்பு, செய்தித் துறை அமைச்சர் ரோஷன் பெய்க் தெரிவித்தார்.

பெங்களூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விண்வெளிப் பாதுகாப்புக் கண்காட்சியைத் தொடக்கி வைத்து, விழா மலரை வெளியிட்டு அவர் பேசியது:

தேசிய அளவில் விண்வெளிப் பாதுகாப்பு உள்ளிட்ட சேவைகளில் கர்நாடகம் முதலிடத்தை வகிக்கிறது. இதேபோல, விண்வெளிக் கொள்கையை வகுத்துள்ள முதல் மாநிலமாகவும் கர்நாடகம் உள்ளது.

இதன்மூலம், விண்வெளி, உள்கட்டமைப்புக்கு கர்நாடகம் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. மாநிலத்தில் விமானச் சேவையை ஊக்குவிக்க தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

தொழில் துறையை மேம்படுத்த வல்லுநர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு அளிக்கும் அறிக்கையை விரைந்து செயல்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது. விண்வெளிப் பாதுகாப்பு உள்ளிட்ட சேவைகளுக்குத் தேவையான உதவியை வழங்க அரசு தயாராக உள்ளது என்றார்.

கண்காட்சியில் மாநில உள்கட்டமைப்புத் துறை செயலாளர் வந்திதா சர்மா உள்பட பலர் கலந்து கொண்டனர்.